களம்-19 வெற்றி-4

இலஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!

ஏப்ரல் 2021

# நேர்மை நெறி

[ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்]

Regd.No.349/2001

"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

(NAERMAI NERI) ரூ.10/-

# லஞ்சம் கொடுத்து வாக்குகளை வாங்கியவர்கள் தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களா?





## லஞ்சம் = சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம் : 155, "நம்பகம்"
கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை - 600 023.
Cell : 8778312823
e-mail : acmchennai2001@yahoo.co.in
Website : anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே!**

**வணக்கம். இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

**எச்சரிக்கை:** அன்பார்ந்த உறுப்பினர்களே, நமது இயக்கம் ஏற்கெனவே இரு நிர்வாகிகளை கோவிட்-19 வைரசுக்கு பலி கொடுத்துவிட்டது. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. தற்போது கோவிட்-19 வைரஸ் ஆனது புது வடிவம் எடுத்து இரண்டாவது பேரலையாக வரத்துவங்கிவிட்டது. மேலும், இதன் வீரியம் எப்போது எப்படி மாறும் என்பது மருத்துவ உலகுக்கே சவாலாக உள்ளது. எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19லிருந்து பாதுகாத்துக்கொள்ள, அரசு தடுப்பு ஊசியை உடனடியாக போட்டுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தடுப்பூசி போட்டுக் கொண்டாலும், தொடர்ந்து அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுகிறோம்.

தேர்தல் அவலங்கள் நிறைவேறி அவலங்களின் முடிவுக்காக காத்திருக்கிறார்கள்:

தேர்தல் அவலங்களுக்கு மக்களே காரணம் என்பதை சென்ற இதழில் பார்த்தோம். மன்னராட்சியில் “மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி”. ஆனால், மக்களாட்சியில் “மக்கள் எவ்வழி மன்னன் அவ்வழி” என்பது மீண்டும்

இயக்கத்தின் ஆரம்பம் முதல், தன் வாழ்நாள் வரையில், தலைவர் : அமரர் **திரு.C.S.குப்புராஜ்** அவர்கள், தன் மறைவிற்கு பிறகும் தன் மகள் மூலம் கொடை வழங்கி இயக்கத்தின் வளர்ச்சிக்கு வித்திடுகிறார்.


வாய்மையே வெல்லும்

**நீலா கண் மருத்துவகம்**

**Dr.ஜெயந்தி ஆனந்தன், MBBS., D.O.,**

21, நல்லப்பன் தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004.

போன் : 044-24642755 / 9884245069

**பார்க்கும் நேரம் : திங்கள் முதல் வெள்ளி வரை**

காலை 9.30 முதல் 11.30 மணி வரை

மாலை 4.00 முதல் 8.00 மணி வரை



சனிக்கிழமை காலை 10.00 மணி

முதல் மாலை 4.00 மணி வரை

(ஞாயிறு விடுமுறை)



**தானத்தில் சிறந்தது கண் தானம்**

நிரூபிக்கப்பட்டுவிட்டது. "எங்கள் ஊருக்கு வாக்குக்கு லஞ்சப் பணம் ஏன் கொடுக்கவில்லை என்று கட்சி ஆபீஸை மக்கள் முற்றுகையிட்ட கேலிக்கூத்துக்களும் அரங்கேறியுள்ளதாக தகவல் வந்து கொண்டிருந்தன. இது ஜனநாயகத்தின் அவலத்தினை வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மாதம் தோறும் ரூ.1500/- தருவோம் என்று ஆளும் கட்சியும், நாங்கள் ரூ.1000/- தருவோம் என்று ஆளத்துடிக்கும் கட்சியும் போட்டி போட்டுக்கொண்டு வாக்குறுதிகளை அளித்துள்ளன. ஆக, எங்களுக்கு ஓட்டுப்போட்டால் நாங்கள் லஞ்சம் தருவோம் என்று வெளிப்படையாக மக்களுக்கு லஞ்சம் (நஞ்சு) தர முன்வந்துள்ளன. இரு கழகங்களும் தங்கள் தேர்தல் வாக்குறுதிகளை எழுத்து மூலமே அறிவித்துள்ளன.

பல்வேறு நல்ல காரனத்திற்காக, மாண்புமிகு நீதிமன்றங்கள் தாமாகவே முன்வந்து பொது நல வழக்குகளாக எடுத்துக்கொள்ளும்போது, இந்த ஊழலை ஒழிக்க தாமாக முன்வந்து பொது நல வழக்காக விசாரித்திருப்பின், இந்த இரு கட்சிகளும் தேர்தலில் நிற்கத் தடை விதிக்கப்பட்டிருக்கும், தமிழ்நாட்டிற்கு ஒரு விடியல் கிடைத்திருக்கும். ஆனால், அது நடைபெறவில்லை. இந்த அறிவிப்பை பார்த்தபின்பும், எந்த ஒரு இயக்க உறுப்பினரும், "இந்த அநியாயங்களை ஏதிர்த்து பொதுநல வழக்கை ஏன் தொடுக்கவில்லை" என்று நிர்வாகிகளைத் துளைத்தெடுத்திருக்க வேண்டும். யாரும் அவ்வாறு செய்யவில்லை என்பது மிகுந்த மன வேதனை அளிக்கிறது.

இந்தத் தேர்தல் வாக்குறிதிகள் வெளியான அன்றே இந்த வழக்கை நாம் தாக்கல் செய்ய விரும்பி பொது செயலர் அவர்களுடன் விவாதித்தோம். ஆனால் உறுப்பினர்களிடமிருந்து எந்த அழுத்தமும் வராதது ஒரு ஏமாற்றமாக இருந்தது. இது குறித்து ஒரு சில உறுப்பினர்களிடம் கருத்துக்கேட்டபோது, அவர்கள் இந்த சட்ட விபரங்கள் எங்களுக்குத் தெரியாது. தலைமை முடிவெடுப்பின், நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். இதுபோன்ற நிகழ்வுகளில், முடிவெடுத்து இயக்க குறிக்கோளை வென்றெடுக்க முடிவெடுக்க வேண்டியது இயக்கத்தலைமையேயன்றி உறிப்பினரல்லர் என்று வாதிட்டார். இந்தப்பதிலில் இருக்கும் உண்மை எமக்கு உறைத்தது.

எனவே, இயக்க செயற்குழு இதுகுறித்து உடனடியாக ஒரு அவசரக்கூட்டம் நடத்தி தீர்க்கமான ஒரு முடிவெடுத்து செயல்படும். ஒரு சில உறுப்பினர்கள் இதன் பின்விளைவுகள்தான் பயம் அளிக்கிறது என்று தெரிவித்தனர். மேலும், மக்கள் பாதை நீட்டை எதிர்த்து போராடியபோது அமைதியாக உண்ணாவிரதம் இருந்த ஆண்கள்/ பெண்கள் மீது காவல்துறை நடத்திய கொடூரத் தாக்குதல்களை முன்வைத்தனர். இது உண்மைதான், ஆனால், யாம் இயக்கத்திற்கு தலைமை ஏற்கும் வரை, இயக்க உறுப்பினர்களை சட்டத்திற்குப் புறம்பான எந்த ஒரு செயலையோ/போராட்டத்தையோ செய்யத் தூண்டமாட்டோம். ஆனால், நமக்கு சரி என்று தோன்றுகிறது என்பதற்காக, ஒரு சட்டப்படி நடக்கும் நீட் தேர்வு போன்றவற்றை எதிர்க்கமாட்டோம். நீட் தேர்வு எதிர்ப்பு என்பதும்,

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன்பெறுவீர்!**

விளம்பரக் கட்டண விபரம்

முழுப்பக்கம் : ரூ.2000/- அரைப்பக்கம் ரூ.1000/- கால்பக்கம் ரூ.500/-

இதழில் வெளிவருகின்ற கட்டுரைகள் விளம்பரங்கள் படைபாளிகளையே சார்ந்தது.

நேர்மைநெறி நிர்வாகமோ, ஆசிரியரோ பொறுப்பல்ல.

மருத்துவ கல்லூரியில் இடம் இல்லை என்பதற்காக தற்கொலை செய்வதும் ஒரு அறிவுப்பூர்வமற்ற செயல் என்பது எமது கருத்து. அதை மக்கள் பாதை இயக்கம் ஆதரித்தும் வருந்தத்தக்கது. எனவே, இயக்கக் குறிக்கோள்களை வென்றெடுக்கும் நமது பாதை சட்ட வழியாக இருக்குமே தவிர சட்ட விரோதமாக ஒருபோதும் இருக்காது. நமது வழி சரியாக இருக்கும் வரை, அரசும் பொய் வழக்குகள் போடாது என்பது எமது நம்பிக்கை. எமது அனுபவமும் கூட.

செல்வி ஜெயலலிதாவின் அதிமுக ஆட்சியின் ஊழலை ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிட்டபோதும் கலைஞர் கருணாநிதியின் திமுக ஆட்சியின் ஊழல் குறித்து லஞ்ச ஒழிப்புத்துறையிடம் எழுத்துப் பூர்வ ஊழல் புகார் அளித்துபோதும், செல்வி ஜெயலலிதா அவர்களோ அல்லது கலைஞர் கருணாநிதி அவர்களோ எம்மீது பழிவாங்கும் நடவடிக்கையாக எந்த ஒரு கிரிமினல் பொய்வழக்கும் எம்மீது போடவில்லை. மாறாக, சட்டத்திற்குட்பட்டுத் தான் இடமாற்றம் போன்ற வழக்கமான நடவடிக்கைகள் எடுத்தார்கள். யாமும் அதை சட்டப்படி எதிர்கொண்டு வென்றோம். எனவே, நமது பாதை எதிரியையும் யோசிக்க வைக்கும் அளவுக்கு சட்டப்படியும், கண்ணியமாகவும் இருக்க வேண்டும். அதையும் மீறி, பொய்வழக்குகள் போடப்பட்டாலும், அதன் பேரில் கைது செய்யப்பட்டாலும் அதற்கு பயப்படக்கூடாது. இழப்பு இல்லாமல் எதையும் அடைய முடியாது. ஏன்? தர்மத்தைக்கூட அடைய முடியாது. எனவே, உறுப்பினர்கள் இயக்கம் எடுக்கவுள்ள இந்த சட்ட நடவடிக்கைக்கு ஆதரவு அளிக்கமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அன்புடன்,

**(ந.சுப்ரமணியன்)**

---

**ஊழல் எதிர்ப்பு இயக்கம் , தலைமையகம் சென்னை**

இயக்க உறுப்பினர்களும், மாவட்ட / கிளை நிர்வாகிகளும் தலைமை அலுவலகத்துக்கு பணம் அனுப்பவேண்டுமென்றால் கிழ்க்கண்ட வங்கி கணக்கு ஒன்றில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறாரகள்

A) SBI Ayanavaram Branch
Savings A/C No: 10081976798
IFSC: SBIN0002202

B) IOB Ayanavaram Branch
Savings A/C No: 000901000041657
IFSC: IOBA0000009

கடிதமோ விண்ணப்பமோ உறுப்பினர் சேர்க்கை (புதுப்பித்தல்/ புதிய ) விண்ணப்பமோ அனுப்ப வேண்டிவந்தால் மின்னஞ்சல் மூலமாக தலைமை அலுவலகத்துக்கு அனுப்பவும்
"acmchennai2001@yahoo.co.in'

இவண்

V.கார்த்திகை ராஜன்,

பொதுசெயலாளர்

ஊழல் எதிர்ப்பு இயக்கம் ,சென்னை

# ஊழல் தடுப்பு சீர்திருத்தம்

-V.கார்த்திகை ராஜன்,
இயக்கப் பொதுச்செயலர்

லஞ்சம்/ ஊழல் நம் அனைவரையும் பாதிக்கிறது. ஏற்றத்தாழ்வு, மக்கள் மற்றும் இயற்கை வளங்களின் சுரண்டல், அடித்தட்டு மக்களுக்கு அடிப்படை வசதியின்மை, மோசமான உட்கட்டமைப்பு மற்றும் குடிமைப் பிரச்சனைகள் என நாம் அன்றடம் வாழ்வில் சந்திக்கும் பல சமூக, பொருளியல் மற்றும் அரசியல் பிரச்சனைகளுக்கு ஊழல் ஒரு மிக முக்கியமான காரணம். ஊழல் நம் நாட்டின் பொருளாதாரத்தையும், வளர்ச்சியையும் சீரழிக்கிறது. அடித்தட்டில் வாழும் மக்கள் ஊழலால் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

மின் இணைப்பு, கழிவுநீர் அகற்றுதல், குடிநீர் இணைப்புகளை சீர் செய்தல், அரசு மருத்துவமனை, பிணவறை, வாரிசு சான்றிதழ், ஓய்வூதியம், நியாய விலைக் கடை, பொது விநியோகம் என அரசின் அனைத்து சேவைகளையும் பெற லஞ்சம் தர நிர்பந்திக்கபடுகிறார்கள். மேலும் ஓட்டுனர் உரிமம், நில பட்டா, பத்திரப்பதிவு, போன்ற அனைத்து அரசு சேவைகளுக்கும் லஞ்சம் தர வேண்டிய நிலை உள்ளது.

மற்றொரு புறம், நம் அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மிகப்பெரிய ஊழல்கள் நடக்கின்றன. இவை அரசாங்க அமைப்புகள், கொள்கைகள், சட்டங்கள் ஆகியவற்றினை மீறியும், வளைத்தும் சில தனி நபர்கள் சட்ட விரோதமாக ஆதாயம் அடையும் வகையிலும் அரங்கேறுகின்றன. தாது மணல் கொள்ளை, குட்கா ஊழல், கிரானைட் ஊழல், நிலக்கரி ஊழல் என சமீபத்தில் பல ஊழல்கள் வெளிவந்துள்ளன. டெண்டர் ஒப்பந்தங்களில் நடக்கும் ஊழலால் நம் அரசின் வரிப் பணம் மிகப்பெரிய அளவில் கொள்ளை அடிக்கப்படுகிறது. மேலும் பணி நியமனம் மற்றும் இட மாற்றத்தில் நடக்கும் லஞ்சத்தால் நேர்மையான அரசு அதிகாரிகளும் மக்களும் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

தமிழகத்தில் வெறும் 6% மக்களே, மாநில அரசு ஊழலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கின்றது என்று நம்புவதாக ஒரு ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது. ஊழல் குனறவாக உள்ள நாடுகள் குறியீட்டில் உலகளவில் 179 நாடுகள் கொண்ட பட்டியலில் இந்தியா 80 வது இடத்தில் உள்ளது. இதனால், ஊழலை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய சமுதாயக் கடமை நம் அனைவருக்கும் உண்டு.

## ஊழல் தடுப்புக் கொள்கைகள்

ஊழலை ஒழிக்கவும் குறைக்கவும் பல சட்ட மாற்றங்களும் அதை அமல்படுத்தத் தொடர் முயற்சியும், அர்ப்பணிப்பும் தேவை.. ஊழலை ஒழிப்பதற்கு உலகளவில் பல நாடுகளில் செயல்படுத்திய முக்கிய கொள்கைகள் குறிப்பிடப்பட்டுளன:

1. அரசு நிர்வாவாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை தேவை.
2. ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் அமைப்புகளும், ஆட்சேர்ப்பு மற்றும் பணி நியமணம் செய்யும் அமைப்புகளும் சுதந்திரமாகவும் தன்னிசையாகவும் இயங்க வேண்டும்.
3. ஜனநாயகத்தில் மக்கள் பங்கெடுப்பையும், முடிவு எடுக்கும் அதிகாரத்தையும் அதிகப்படுத்துதல் மற்றும் நிர்வாக கட்டமைப்பைப் பரவலாக்குதல்.

நமது நாட்டில் ஊழல் தடுப்பு சட்டத்தை நேர்மையான முறையில் நடைமுறைப்படுத்த கீழ்க்கண்ட முறைகளில் செயல்படுத்த வேண்டும்.

- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதி கொள்ளுதல்.
- தகவல் பெறும் உரிமை சட்டத்தைக் காத்தல்.
- தமிழக டெண்டர் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும்.
- சேவை பெறும் உரிமை சட்டம் கொண்டுவர வேண்டும்.
- மின் ஆளுமை( e-Governance) வசதியை மேம்படுத்த வேண்டும்.
- மாநிலம் தழுவிய குறை தீர்ப்பு முகமையை அமுல்படுத்தி நடுநிலைமையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஊழல் தடுப்பு சட்டத்தில் மத்திய அரசு திருத்தங்கள் செய்து நடுநிலமையுடன் செயல்படுத்த வேண்டும்.
- இயற்கை வளங்களைக் காப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு தேவை.
- நீதித்துறை சீர்த்திருத்தங்கள் செயல்படுத்துதல்.
- காவல் துறை சீர்த்திருத்தங்கள் செயல்படுத்துதல்.
- தேர்தல் சீர்த்திருத்தங்கள் செயல்படுத்துதல்.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தைத் திருத்தவும் நடைமுறைப்படுத்துதலிலும் நேர்மை.

---

## <u>மாற வேண்டியது மக்களாகிய நாம்தான்</u>

200 ரூபாய் பணத்திற்கும் ஒரே ஒரு பிரியாணி பொட்டலத்திற்கும் வறண்ட நாக்கோடு கொளுத்தும் கொடும் வெயிலில் உயிரையும் இழக்கத் தயாராகிப்போன ஒரு சமூகத்தில் புரட்சி எங்ஙனம் வெடிக்கும்?

அயோக்கியன் என்று தெரிந்த பின்னும் அவனுக்கு ஆரத்தி எடுத்து ஆரத்தித் தட்டில் விழப்போகும் சில்லரை பணத்திற்காக பல்லிளித்து நிற்கும் ஒரு சமூகத்தில் மாற்றம் எங்ஙனம் சாத்தியம்?

எத்தனை கொடுமைகள் இழைத்தாலும் அதனையெல்லாம் மறந்துவிட்டு மீண்டும் மீண்டும் சின்னங்களை மட்டுமே பார்த்து வாக்களிக்கும் ஒரு சமூகத்தில் மாற்றம் எப்படி நடக்கும்? படித்தவன் சூதும் பாவமும் செய்கிற சமூகத்தில் முன்னேற்றம் எந்த வழியில் வந்து சேரும்?

என் அப்பா அந்தக் கட்சி... என் தாத்தா அந்தக் கட்சி "நாங்கள் பரம்பரை பரம்பரையாய் அந்தக் கட்சிக்குத்தான் ஓட்டுப்போடுவோம்" என்று அப்பன் வெட்டிய கிணற்றில் உப்புத்தண்ணீர் குடிக்கிற மகன்கள் இருக்கிற தேசத்தில் புதிய மலர்ச்சி எப்படி உருவாகும்?

கட்சி எது? சின்னம் எது? தலைவர் யார்? எது சரியான பாதை? என்ற அடிப்படை அரசியல் அறிவுகூட இல்லாத பட்டதாரிகள் மலிந்த இளைய தலைமுறையினால் மாற்றம் எப்படி வந்து சேரும்?

தேர்தல் என்றால் ஒரு நாள் விடுமுறை என்று வாக்குச்சாவடிக்கு செல்லாமல் விடுமுறை கொண்டாடுகிற தேசத்தில் புதிய அரசு எப்படி சாத்தியம்?

எமது மக்கள் எப்போதும் தற்காலிக சுகங்களிலே நிறைவடைந்து விடுபவர்களாய் இருக்கிற வரையிலும் நிம்மதியான வாழ்க்கையை வாழவே போவதில்லை...

People deserve the Government.....

மக்களின் தரத்திற்குத் தக்கபடிதான் அரசு அமையும்..

*முதலில் மாற வேண்டியது அரசியல்வாதி அல்ல.. "மக்களாகிய நாம்தான்"....*

## கொள்ளை அடிப்பதற்காகவே செயல்படுத்தபடும் ஊழல் திட்டங்கள்

உண்மையில், அரசு அதிகாரிகள்- ஊழியர்கள் மத்தியில் பேசிக் கொள்வது என்னவென்றால் இதுவரை இல்லாத வகையில் ஒப்பந்தக்காரர்கள், உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து கொள்ளையடிப்பதற்கு திட்டங்களைத் தீட்டி, கொள்ளையைப் பகிர்ந்து கொடுக்கிற ஒரு திட்டத்தை வடிவமைத்து, செயல் படுத்துவதும் தான் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் தற்போதைய செயல் திட்டங்கள். அரசிடம் பணம் இருக்கிறதோ, இல்லையோ பொதுப்பணித்துறை. நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறைகளில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான டெண்டர்கள் அழைக்கப்பட்டன, பணம் கொள்ளையடிக்கப்படுகிறது, பங்குகளும் பிரிக்கப்படுகின்றது. ஏறக்குறைய நான்காண்டுகளுக்கும் மேலாக ஆண்டுகள் இது போன்ற ஊழல்கள் தான் தடையின்றி நடந்தன.

### மின்மிகை மாநிலம் என்பது ஒரு பொய் பிம்பம்:

ஒரு யூனிட் மின்சாரம் கூட சுயமாக உற்பத்தி செய்யாமல், தனியாரிடமிருந்து மின்சாரத்தை அதிக விலைக்கு வாங்குகிறது தமிழ்நாடு மின்சார வாரியம். இந்த லட்சணத்தில் தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக இருக்கிறது என்கிறார் மின்துறை அமைச்சர். தமிழகத்திற்குத் தேவைப்படும் மின்சாரத்தில் 40% தனியாரிடமிருந்து வாங்கப்படுகிறது. இது, மின் வாரியம் தயாரிக்கும் மின்சாரத்திற்கு ஆகும் செலவைவிட பல மடங்கு. அதிகமாகும்.

### இதுவா வளர்ச்சி?

மின்வாரியத்தில் இரண்டு வகையாக ஊழல் நடைபெறுகிறது. ஒன்று, மின் வாரியத்தின் பணத்தில் கொள்ளையடிப்பது. அதாவது, தனியாரிடம் மின்சாரம் வாங்குவதில் கொள்ளை 3330 மெகாவாட் மின்சாரத்தை தனியாரிடம் 15 ஆண்டுகளுக்கு வாங்கியதில் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு ஊழல் நடக்கிறது. இரண்டாவதாக, பொது மக்கள் பணத்தை அளவிட முடியாத அளவிற்கு அடிக்கும் கொள்ளை நமது அமைச்சர்கள், மின் வாரியத்தின் பொறியாளர்களை இட மாறுதல் செய்வதில் மட்டுமே கோடிக் கணக்கில் கொள்ளை அடிக்கப்படுகிறது. இந்தக் கொள்ளை இப்போதும் தொடருகிறது. இவ்வாறாக மின் வாரியத்தின் பணமும், பொது மக்களின் பணமும் ஆண்டுதோறும் கோடி கணக்கில் கொள்ளை போகிறது. முதல் அமைச்சர் ஆட்சியின் சாதனையால் மின்வாரியம் 160000 கோடி கடனில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

### ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பைத் தராத கிராம சாலைகள்:

நெடுஞ்சாலைத்துறையில் கிராம சாலைகள் அபிவிருத்திக்கென்று ஒரு பிரிவு இருக்கிறது, அப்பிரிவில் நூற்றுக்கணக்கான பொறியாளர்கள் இருக்கிறார்கள். இது கிராம மக்களுக்கு வேலை தரும் நோக்கத்தையும் உள்ளடக்கியதாகும். ஆனால், அவ்வாறு தராமல், பெரிய காண்டிராக்டர்களை வைத்து, பெரிய எஸ்டிமேட்டை மிகையாக உருவாக்கி, வெளியாட்களை வைத்து வேலையை முடித்துவிடுகிறார்கள். இது எதற்காக? பெரிய ஒப்பந்தக்காரரிடம் வேலையைக் கொடுத்து வெளியே தெரியாமல் பங்கு பிரித்துக் கொள்ளலாம் என்கிற திட்டத்திற்காகத்தான். ஊரகச் சாலைகளுக்காக ஆண்டுதோறும் பல ஆயிரம் கோடி செலவு செய்கிறவர் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது அமைச்சர்கள் தான். ஊராக வளர்ச்சித் துறையில் இந்தக் கொடுமைகள் அதிகமாகவே நடந்தன்.

கிராம சாலைகளுக்கென்று நெடுஞ்சாலைத்துறை ஏறத்தாழ 5000 கோடி ரூபாய் கடந்த நான்கு ஆண்டுகளில் செலவு செய்திருக்கும். சாதாரணமாக கிராமங்களுக்கு போடுகிற வகையில் சாலைகளைப்

போட்டிருந்தால், செலவும் அதிகம் பிடித்திருக்காது; ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பும் வந்திருக்கும். கொரானா வந்ததால் வேலை இல்லாமல் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் மக்கள் தவித்தபோது எந்திரங்களை வைத்து இரண்டு மூன்று பேர்களைக்கொண்டு சாலை போட்டு பணத்தை எல்லாம் அந்த பணக்கார ஒப்பந்தக்காரர் எடுத்துக்கொண்டு போய்விட்டார். ஏழைகள், அந்தக் கிராமவாசிகள் வயிற்றுக்கு ஈரத்துணி போட்டுக் கொண்டதுதான் மிச்சம். நமது அமைச்சர்களாலும், முதல்வராலும் இப்படித்தான் சிந்திக்க முடியும்.

அகலப்படுப்படுத்தப்படும் சாலைகள், அடிக்கப்படும் கொள்ளைகள்:

நெடுஞ்சாலைத்துறையில் எங்கு பார்த்தாலும் சாலைகளை அகலப்படுத்தும் பணி நடைபெறுவதைப் பார்க்கலாம். இதற்குப் பின்னால் மறைந்திருக்கிற பேராசையை விளக்கமாக சொன்னால்தான் எல்லோருக்கும் தெரியும்.

சாலைகள் ஒரு வழி, இரு வழி, நான்கு வழி என்று போக்குவரத்து அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன. சாதாரண கிராமங்களுக்கு குறைவாக போக்குவரத்து இருப்பதால் 3.75 மீட்டர் அகலத்தில் ஒரு வழி சாலை அமைக்கப்படுகிறது. போக்குவரத்து அதிகமாக இருந்தால் 7 மீட்டர் அகலத்தில் இரு வழிச்சாலை அமைக்கப்படுகிறது. எந்த சாலையாக இருந்தாலும் இருபுறமும் அமைந்துள்ள மண் பாதை சரியாகப் பராமரிக்கப்பட்டால் 10 வாகனம் போகிற இடத்தில் 12 வாகனம் போகலாம். இப்படித்தான் காலம்காலமாக சாலைகள் பராமரிக்கப்பட்டன. லஞ்சப் பணம் வந்து குவியும் என்பதற்காக போக்குவரத்தே இல்லாத சாலைகளிலும், சாலையை அகலப்படுத்துகிறோம் என்று சொல்லி கல்லையும் மண்ணையும் பரப்பி அரசு பணத்தை பல ஆயிரம் கோடி இந்த 10 ஆண்டுகளில் வீணாக்கியிருக்கிறார்கள்.

இதற்காக அவர்கள் போக்குவரத்துக் கணக்கினை மிக மிக அதிகமாக கூட்டிக் காண்பித்து அரசு பணத்தைப் பெற்று, பங்கு கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது கூட பல கிராமப்புற சாலைகளை யார் வேண்டுமானாலும் ஆய்வு செய்யலாம். தேவைப்படாத இடங்களில் அதிக அகலத்தில் சாலை வேண்டுமா? இப்படி அரசு பணத்தை பொறியாளர்கள் வீணாக்குவதற்கு நமது அமைச்சர்களின் பேராசையே காரணம்.

நல்லாட்சிக்கு எதிரியாக இருக்கிற ஆட்சி தொடர்ந்தால் இன்னும் பல கேடுகள் தொடர்வதோடு, தமிழகம் மிகவும் பின்னடைந்துவிடும்..

**குடிமராமத்தா? கொள்ளையா?**

ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் தூர் வாரும் பணிக்காக பொதுப்பணித்துறையில் தொடங்கப்பட்ட குடிமராமத்து திட்டத்தில் ஊழலும் முறைகேடுகளும் தான் நடைபெறுகின்றன. இத்திட்டத்தில் பணிகளை ஆயக்கட்டுதாரர்கள், அவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சங்கங்கள்தான் மேற்கொள்ள வேண்டும் என்று அரசு ஆணை இருக்கிறது. ஆனால், உள்ளூர் மக்கள் பங்கேற்பின்றி பல போலி சங்கங்கள் உருவாக்கப்பட்டு, அந்தச் சங்கங்களுக்கு குடி மராமத்து பணிகள் கொடுக்கப்படுகின்றன, இவர்கள் நீர்நிலைகளில் முறையாக முழுமையாக தூர் வாருவதில்லை, இதனால் நிலத்தடி நீர் ஆதாரமும் பெருகவில்லை. பணி நடக்காமலேயே பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும் கணக்கு எழுதப்படுகிறது, இத்திட்டத்தை முறையாக மேற்கொள்ளாததால் உள்ளூர் மக்களுக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்கள் வேலை பெறுவதற்காக அல்ல இத்திட்டங்கள். அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பல நூறு கோடி அரசு பணம் கொள்ளை அடிப்பதற்காகவே தான் குடி மராமத்து திட்டமே!

**நன்றி: அறம் மார்ச் 30**

## பொதுத்துறை நிறுவனமெனும் விதைநெல்லை விற்கும் மாபாவிகள்!

ஒட்டுமொத்த இந்தியாவையும் எடுத்து தனியார்களிடம் விற்றால் மட்டுமே எங்கள் லட்சியம் நிறைவேறும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது பாஜக அரசு.

1951ல் இந்தியா குடியரசான போது வெறும் ஐந்து பொதுத்துறை நிறுவனங்கள் மட்டுமே இருந்தன. ஆனால், ஜவகர்லால் நேரு தொடங்கி வைத்த லட்சிய பயணத்தில் காலப்போக்கில் அது 348 நிறுவனங்களாக வளர்ந்து கோடிக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பும், தேசத்திற்கு மாபெரும் வருவாயையும் தந்தன என்பது மட்டுமல்ல, நாட்டிற்கு அவை ஒரு நிலையான பெரும் சொத்தாக நிலைபெற்றன.

இந்த மாபெரும் வளர்ச்சியை கண்டு வயிறு எறிந்த பெருமுதலாளிகள் அவற்றை அபகரிக்க நேரம் பார்த்துக் காத்திருந்தனர். அவர்களுக்கு ஆபத்பாந்தனாக அரசியல் அரங்கில் நிறைவேற்றிக்கொண்டிருக்கும் கட்சிதான் தற்போதைய ஆளும் கட்சி. இந்த இயக்கம் அடிப்படையில் மக்களாட்சி தத்துவத்திற்கு எதிரான மன்னர் மரபில் வந்தவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவில் வெள்ளைக்காரனுக்கு அடியாளாக கப்பம் கட்டி, மக்களை ஈவு இரக்கமின்றி சுரண்டி பிழைத்த, ஐநூற்று சொச்சம் சமஸ்தானத்து மன்னர்களின் வாரிசுகள் முன்பு ஜனசங்கம் என்றும் பின்பு பாரதிய ஜனதா என்று அரசியல் இயக்கமானர்கள். இதை நிறைவேற்றத் துடித்துக்கொண்டிருப்பவர்கள்தான் மோடியும், நிர்மலா சீதாராமனும்.

இந்திய சமஸ்தான மன்னர்கள் பற்றி குறிப்பிடுகையில் மகாத்மா காந்தி, "அவர்கள் மனசாட்சியற்றவர்கள், அறத்திற்கு மதிப்பளிக்கும் மனோபாவமற்ற அராஜகவாதிகள்" எனக் கூறியுள்ளார். அதனால் தான் காந்தி இந்திய தேசிய காங்கிரஸுக்கு சமஸ்தான பகுதிகளில் கிளைகளை ஏற்படுத்தக் கூடாது. சமஸ்தான மன்னர்கள் விஷயத்தில் என்னாலோ, காங்கிரசாலோ எதையும் போராடி மக்களுக்கு உதவமுடியும் என்ற நம்பிக்கை அறவே கிடையாது. என்னுடைய போராட்டம் பிரிட்டிஷ் அரசிடமாவது இந்தளவு செல்லுபடியாகிறது. ஆனால், அதுவே எந்த ஒரு சின்னஞ்சிறிய சமஸ்தானத்திலுமே கூட - எவ்வளவு ஆகப் பெரிய தியாகம் செய்து போராடினாலுமே கூட - வெற்றிபெற முடியாது என்றார்.

அது தான் தற்போது விவசாயிகள் போராட்டம் தொடங்கி அனைத்து நிலைகளிலும் நாம் பார்ப்பது. இந்திய விவசாய வளத்தை எப்படி ஒரு சில தனி மனித முதலாளிகளிடம் ஒப்படைக்க சட்டம் போட்டார்களோ.. அதே போலத்தான் பொதுத்துறை நிறுவனங்களை அழிப்பதற்கு என்றே ஆட்சி செய்கிறார்கள்.

1999- 2004 வரையிலான வாஜ்பாய் காலத்தில் ஆரம்பித்தது இந்த பொத்துத்துறை நிறுவனங்களை அழித்தொழிக்கும் ஆபரேஷன். அதற்காக அருண்ஷோரி என்பவரைக் கொண்டு தனி அமைச்சகமே உருவாக்கப்பட்டது. பால்கோ, இந்துஸ்தான் ஜிங்க், இந்தியன் பெட்ரோ கெமிக்கல்ஸ் என்று ஆரம்பித்த பொதுத்துறை நிறுவனப் பங்குகளை தனியாருக்கு விற்கும் முயற்சி இன்று விஸ்வரூபமெடுத்துள்ளது. தற்போது பொதுத்துறை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், உரத் தொழிற்சாலைகள், பெட்ரோலிய நிறுவனங்கள், இராணுவ தளவாட உற்பத்தி தொழிற்சாலைகள் என ஒவ்வொன்றாக கொள்ளை போய்க் கொண்டிருக்கின்றன.

அதுவும் நரேந்திரமோடி பதவி ஏற்ற 2014 முதல் 2018 வரை மட்டுமே 1,94,646 கோடி ரூபாய் மதிப்புள்ள பொது நிறுவனங்களின் சொத்துகள் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு 2019-20ல் மட்டுமே 24 பொதுத்துறை நிறுவனங்களின் ஒரு லட்சத்து ஐயாயிரம் கோடி மதிப்புள்ள பங்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தற்போதைய நிதியாண்டில் (2020-21) ஒரு லட்சத்து இருபாதாயிரம் கோடி விற்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் மிகுந்த லாபம் தந்து கொண்டுள்ள ஓ.என்.ஜி.சி மற்றும் இந்துஸ்த்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசனையும் கூட விட்டுவைக்கவில்லை.

பொதுத்துறை நிறுவனங்களே இந்தியாவின் கோயில்கள் என்றார் நேரு. 2017-18 நிலவரப்படி 331 பொதுத்துறை நிறுவனங்களை இந்தியா கொண்டிருந்தது. இதில் ஆண்டொன்றுக்கு ரூபாய் 2,500 கோடிக்கும் அதிகமாக லாபம் ஈட்டித்தரும் பத்து பெரு நிறுவனங்களும் அடக்கம். மொத்த நிறுவனங்களில் 170 க்கும் மேற்பட்டவை நல்ல லாபத்துடன் இயங்குகின்றன. நமது நாட்டின் பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் 2019ஆம் ஆண்டில் கிடைத்த லாபம் மட்டுமே 16.41 லட்சம் கோடி.

பொதுத்துறை நிறுவனங்களிலேயே மிக அதிக சொத்தை கொண்டது இந்திய ரயில்வே. இது தினசரி மூன்று கோடிக்கும் அதிகமான மக்களுக்கு சேவை செய்கிறது. நல்ல லாபத்துடன் இயங்குகிறது. ரயில்வேயிடம் மட்டுமே 10.65 லட்சம் ஏக்கர் நிலங்கள் சொந்தமாக உள்ளன் இந்த ரயில்வேயும் தற்போது தனியார்மயமாக்கப்பட்டு வருகிறது இனி ரயில் டிக்கெட் கட்டணங்கள் தாறுமாறாக உயரவுள்ளன.

45 கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் உலகின் மிகப் பெரும் காப்பீட்டு நிறுவனமான எல்.ஐ.சியின் பங்குகளும் இனி விற்கப்படும். இந்த ஆண்டு மட்டுமே பஞ்சாப் நேஷனல் பாங்க் மற்றும் பாங்க் ஆப் பரோடா ஆகியவற்றில் உள்ள அரசின் பிடி தளர்ந்து தனியார் கைகளுக்கு போகிறது.

பி.எஸ்.என்.எல் என்ற லட்சக்கணக்கானோருக்கு வேலை தந்த பொதுத்துறை நிறுவனத்திற்கு 4ஜி அலைக்கற்றை தர மறுக்கப்பட்டு, ரிலையன்ஸ்சின் ஜியோவை வளர்ப்பதற்காக திட்டமிட்டு அழிக்கப்பட்டது. 2ஜி ஊழலைவிட மிகக் கொடியதும், பிரம்மாண்டமானதும், பல லட்சம் பேர் வேலை பறிபோக காரணமானதும் இது தான். அந்த 2ஜி ஊழலை எழுதிய அளவில், பேசிய அளவில் பத்தில் ஒரு பங்கைக்கூட ஊடகங்கள் 4ஜி அலைக்கற்றை விவகாரத்தில் செய்யவில்லை. ஏன் அரசு நிறுவனத்திற்கு 4ஜி அலைக்கற்றை மறுக்கப்பட்டு, அம்பானிக்கு வழங்கப்பட்டது என வலுவான கேள்வி எழவில்லை. ஒ.என்.ஜி.சியின் 30,000 கோடி மதிப்புள்ள எரிவாயுவை ரிலையன்ஸ் அம்பானி திருடியது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், அவர்களை தண்டிக்கவில்லை. கோர்டு, வழக்கு என்று அரசுக்கு மேலும் செலவானது தான் கண்ட பலன். அம்பானி திருடவும், நாட்டின் வளங்களை அழிப்பதற்கும் துணை போகும் ஆட்சியாளர்களுக்கு ஊழலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற தோற்றம் வேறு கட்டமைக்கப்படுகிறது.

பொதுத்துறை நிறுவனங்கள் சிலவற்றில் ஊழல் நடக்கிறது. ஊழியர்கள், அதிகாரிகள் சரியாக வேலை செய்வதில்லை, ஊதாரித்தனமாக செலவழிக்கப்படுகிறது, ஆட்சியாளர்கள் தலையீடு உள்ளன. ஆகவே அவற்றை விற்பது குற்றமல்ல அரசுக்கு சுமை குறையட்டும" என்ற வாதங்கள் வைக்கப்படுகின்றன் இவற்றை சரி செய்து நேர்மையான நிர்வாகத்தை உறுதிபடுத்தவே நாம் ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளோம். அந்தஸ்தும், மரியாதையும் கொடுக்கிறோம். நேர்மையான நிர்வாகத்தை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அவர்களுடையது. அதை செய்ய துப்பில்லாமல் பொதுத்துறை நிறுவனங்களை விற்பனை செய்வதை ஒரு சிறிதும் மன்னிக்க முடியாது. மீண்டும், மீண்டும் பொதுத்துறை நிறுவனங்களை விற்ற பணத்தைக் கொண்டு தான் அரசு நிர்வாக செலவுகளை ஈடுகட்ட முடிகிறது என வாதாடுகிறார்கள். அப்படி ஒவ்வொரு ஆண்டும் எல்லாவற்றையும் விற்று முடித்துவிட்ட பிறகு நிதி திரட்ட என்ன செய்வீர்கள்?

அரசுத்துறை தருவது போன்ற தன்னலமற்ற சேவையை தனியார்களால் ஒரு போதும் தரமுடியாது. கொரனா காலத்தில் அரசு மருத்துவமனைகளும், அரசு மருத்துவர்களும் தான் களத்தில் இருந்தனர். தனியார்

மருத்துவமனைகள் முதல் மூன்று மாதத்திற்கு முடங்கி கிடந்தனர். பிறகு கொரானாவில் பணம் பார்க்கலாம் என தெரிய வந்ததும் தான் களத்திற்கே வந்தனர். இதே போல கிராமங்களில் கூட சேவை செய்யும் அமைப்பாக அரசின் தபால்துறையும், அரசின் வங்கிகளுமே உள்ளன. அன்றைய ஆட்சியாளர்கள் உருவாக்கித் தந்தார்கள். இன்றைய ஆட்சியாளர்கள் அதை அழித்து தின்கிறார்கள். பொதுத்துறை நிறுவனங்களை அழிப்பதன் மூலம் பல லட்சம் வேலை வாய்ப்புகளை காலிபண்ணிக் கொண்டிருக்கும் இந்த ஆட்சியாளர்களை எதிர்க்காவிட்டால் நாளை இட ஒதுக்கீடு என்ற வார்த்தைக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். வேலை என்று இருந்தால் தானே இடஒதுக்கீடு என்று கேட்க முடியும்.

பொதுத்துறை நிறுவனங்கள் என்பவை விதை நெல்லைப் போன்றவை. எந்த ஒரு விவசாயியும் விதை நெல்லை அடுத்த விளைச்சலுக்கு மட்டுமே பயன்படுத்துவானேயன்றி விற்கவே மாட்டான். விதை நெல்லைப் போன்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கு அன்று விதை போட்டது என்பது விளைச்சலை பெருக்கி வளர்த்து செல்வதற்குத் தான். ஆனால் அதை விளைச்சலுக்கு பயன்படுத்தாமல் விற்பனை செய்வது மாபெரும் குற்றம் மட்டுமல்ல, மகாபாதகமான, மன்னிக்கவே முடியாத பாவச் செயலாகும்.

**சாவித்திரி கண்ணன் -** அறம் இணைய இதழ் (February 4, 2021)

## <u>நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்</u>

### <u>உபயோகமான பொருள்</u>

சபர்மதி ஆசிரமம்

காந்திஜி தனக்கு வந்த கடிதங்களைப் பார்க்கும் நேரம்

வெளியே வெள்ளைக்காரத் தூதுவர் ஒருவர் அவரைச் சந்திக்கக் காத்திருந்தார். சந்திக்க அனுமதி கிடைத்தவுடன் உள்ளே சென்று ஓர் கடித உறையை நீட்டினார்.

அவரை அமரச் சொன்ன காந்திஜி, அவர் கொடுத்த கடிதத்தைப் பார்த்தார். பிறகு அதை அருகிலிருந்த குப்பைக் கூடைக்குள் போட்டு விட்டார்.

வெள்ளைக்காரர் திகைத்தார்

"நல்லது, நீங்கள் போகலாம்" என்றார் காந்திஜி.

வெள்ளைக்காரருக்குப் பொறுக்கவில்லை.

அவர் சற்று கடுமையான குரலில், "மிஸ்டர் காந்தி நான் கொடுத்த கடிதத்தைப் படிக்காமல் அப்படியே குப்பைக் கூடைக்குள் போட்டு விட்டீர்களே; அதில் உங்களுக்கு உபயோகரமான விஷயம் ஏதேனும் இருக்கலாமல்லவோ" என்றார்.

காந்திஜி அவரைப்பார்த்து மெல்லப் புன்சிரித்தார்.

"உங்கள் கடிதத்தைப் படித்துப் பார்த்த பின் தான் குப்பைக் கூடைக்குள் போட்டேன். உண்மையில் உபயோகப்படும் ஒரு பொருள் உங்கள் கடிதத்திலிருந்தது. அதை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டேன்" என்று கூறிய காந்திஜி, அவர் கடிதத்திலிருந்து உருவி எடுத்த ஒரு குண்டூசியை எடுத்துக்காட்டினார்.

வெள்ளைக்காரர் வெட்கப்பட்டு வெளியேறினார்.

## ரபேல் : ஊழல் முறைகேடுகளை சுட்டிக்காட்டியது பிரான்ஸ் ஊழல் எதிர்ப்பு முகமை!

பிரான்ஸ் ஊழல் எதிர்ப்பு முகமை நடத்திய ஆய்வில், இந்தியாவைச் சேர்ந்த டெப்சிஸ் நிறுவனத்துக்கு காரணமின்றி ரூ.8.62 கோடி பணம் கைமாறியதை சுட்டிக் காட்டியிருக்கிறது.

ரபேல் விமானங்களை இந்தியா வாங்கியதில், இடைத்தரகு நிறுவனம் ஒன்றிற்கு பல கோடி ரூபாய் பணம் வழங்கியதாக ரபேல் விமானத் தயாரிப்பு நிறுவனமான டஸ்ஸால்ட் நிறுவனத்தின் மீது குற்றம்சாட்டியிருக்கிறது பிரான்ஸ் நாட்டின் ஊழல் எதிர்ப்பு முகமை.

கடந்த 2016-ம் ஆண்டு மோடி அரசால் பல்வேறு விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் தாண்டி போடப்பட்ட ரபேல் ஒப்பந்தத்தை ஒட்டி, இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவிற்கு இழப்பு என்பதை பல்வேறு ஆதாரங்களில் இருந்தும் தொழில்நுட்ப விவரங்களில் இருந்தும் பலரும் அம்பலப்படுத்தினர். இந்திய பொதுத்துறை நிறுவனமான எச்.ஏ.எல் நிறுவனத்துடன் போடப்பட்ட ஒப்பந்தத்தை முறித்துவிட்டு, அதை விட அதிகமான விலையில் தொழில்நுட்பத்தை இந்தியாவுடன் பகிராத வகையில் அனில் அம்பானி நிறுவனத்துக்கு ஆதாயம் கிடைக்கும் வகையில் ஒப்பந்தம் போடப்பட்டது.

இது தொடர்பாக போடப்பட்ட வழக்கில் ரபேல் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தம் உள்ளிட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மோடி அரசை கேட்டுக் கொண்டது உச்சநீதிமன்றம். ரபேல் தொடர்பான ஆவணங்கள் தொலைந்து போய்விட்டதாக நீதிமன்றத்தில் அப்பட்டமாகப் பொய் சொன்னது மத்திய அரசு.

மத்திய அரசின் இந்த வாக்குமூலத்தை "அப்பாவி"யாக தன்னை பாவித்துக் கொண்டு கேட்டுக் கொண்டு அமைதியாக இருந்து விட்டது உச்சநீதிமன்றம். இது தொடர்பாக இந்து என். ராம் உள்ளிட்ட பத்திரிகையாளர்கள் அம்பலப்படுத்தத் துவங்கினர். ரபேல் ஊழல் தொடர்பாக வெளியிடப்பட்ட ஒரு வெளியீட்டை உடனடியாக கைப்பற்றி அழிக்க அடிமை எடப்பாடி அரசு அச்சமயத்தில் மும்முரமாய் செயல்பட்டது நினைவில் இருக்கலாம்.

சமீபத்தில் பிரான்ஸ் நாட்டின் ஊழல் எதிர்ப்பு முகமை சமர்ப்பித்துள்ள அறிக்கையில், 2017-ம் ஆண்டு டஸ்ஸால்ட் நிறுவனம் இந்திய நிறுவனமான டெப்சிஸ் நிறுவனத்திற்கு ரபேல் விமானத்தின் 50 மாதிரிகளைச் (Model) செய்வதற்கு பணம் கொடுக்கப்பட்டதாக காட்டப்பட்ட கணக்கிற்கு உரிய ஆதாரம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.

அதாவது கடந்த மார்ச் 30, 2017 தேதியிடப்பட்ட விற்பனை ஆவணத்தில் 8.8 கோடி மதிப்பிலான ரபேல் விமான மாதிரிகள் செய்வதற்கான ஆணையை வழங்கியிருக்கிறது. ஆனால் அந்த மாதிரிகள் உண்மையாக தயாரிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதையும் அந்த நிறுவனம் சமர்ப்பிக்க வில்லை. மேலும் இந்த செலவினத்தை வாடிக்கையாளருக்கான பரிசு என்ற பெயரில் குறிப்பிட்டுள்ளது ரபேல் நிறுவனம். இது குறித்து ஊழல் எதிர்ப்பு முகமையின் கண்காணிப்பாளர்கள் எழுப்பிய கேள்விக்கு முறையான ஆவணங்களை வழங்க முடியவில்லை.

இந்த மாதிரிகளை செய்வதற்கு பணியாணை பெற்ற நிறுவனமான டிப்சிஸ் சொலுசன்ஸ் (Defsys Solutions)

நிறுவனமானது ரபேல் ஒப்பந்தத்தில் இந்தியாவில் ஒப்பந்தம் போடப்பட்ட டஸ்ஸால்ட் நிறுவனத்தின் துணைத் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாகும்.

இது குறித்து பிரான்சின் புலனாய்வு செய்தி நிறுவனமான மீடியா பார்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், டிப்சிஸ் நிறுவனமானது மூன்று தலைமுறையாக வானூர்தி மற்றும் இராணுவ தளவாடங்கள் விற்பனையில் தரகு வேலை பார்க்கும் குடும்பத்தைச் சேர்ந்த குப்தா என்பவருக்குச் சொந்தமானது என்றும், கடந்த 2019-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில், கோப்ரா போஸ்ட் மற்றும் எக்கனாமிக் டைம்ஸ் ஆகிய இரண்டு செய்தி நிறுவனங்களும் குப்தா குடும்ப உறுப்பினரான சுசேன் குப்தா டஸ்ஸால்ட் நிறுவனத்துடனான ரபேல் ஒப்பந்தத்தில் இடைத்தரகராக செயல்பட்டதாகவும், ரபேல் ஒப்பந்தத்தை முடிப்பதற்கு இந்திய பாதுகாப்புத் துறையின் பல இரகசிய ஆவணங்களையும் இந்நிறுவனம் பெற்றதாக்வும் செய்தி வெளியிட்டன என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதற்கு அப்படியே பொருந்தும்படி தற்போது இந்த தரகு நிறுவனம் அளித்த 8.8 கோடி ரூபாய் மதிப்பிலான பில் அம்பலமாகியிருக்கிறது. இந்த சுஷென் குப்தா கடந்த 2019-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமலாக்கத்துறையால், அகஸ்டா வெஸ்ட்லாண்ட் ஹெலிகாப்டர்கள் வாங்கியதில் நடைபெற்ற பண மோசடிக்காக கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த குப்தா விவகாரம் ரபேல் ஒப்பந்த விவகாரத்திலும் அம்பலமாகிவிட்டது. செய்திகளில் இந்த முறைகேடு அம்பலப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட துறையில் நடந்திருக்கும் மிகப்பெரிய முறைகேட்டின் ஒரு சிறு பங்கு அம்பலமான நிலையில், இதனை தாமாக முன் வந்து விசாரித்திருக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமை.

ஆவணங்கள் தொலைந்து போனதையே "அப்பாவியாக" ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், உண்மையிலேயே ரபேலின் மாடல் தயாரித்துத் தந்ததாக சுஷென் குப்தா, சாமி மேல் சத்தியம் செய்து கூறினால் ஏற்றுக் கொள்ளாதா என்ன ?

செய்தி ஆதாரம் : தி வயர்

---

## இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:

**திரு N சுப்ரமணியன், தலைவர் : 9444274352**
**திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : 87783 12823**

**திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் : 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

## ராணுவ ஆட்தேர்வில் மெகா ஊழல்..! 6 லெப்டினனட் கர்னல் அதிகாரிகள் உட்பட 23 பேர் மீது வழக்கு பதிவு செய்தது சிபிஐ..!



ராணுவ ஆட்தேர்வு வாரிய மையங்கள் மூலம் ராணுவ அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் ஊழல் செய்ததாக சிபிஐ, ஆறு லெப்டினனட் கர்னல் தரவரிசை அதிகாரிகள் மற்றும் மேஜர் உள்ளிட்ட 23 பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக சிபிஐ நாடு முழுவதும் 30 இடங்களில் தேடல்களை மேற்கொண்டது. ஆட்சேர்ப்பு மோசடியின் சூத்திரதாரி என்று கூறப்படும் இராணுவ விமான பாதுகாப்பு படையின் எம்.சி.எஸ்.என்.ஏ பகவான், வழக்கு பதிவு செய்யப்பட்டவர்களில் ஒருவர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த மாதம், ராணுவ ஆட்தேர்வுக்கான தேர்வுத்தாள் கசிந்ததாகக் கண்டறியப்பட்டதை அடுத்து, நாடு தழுவிய ஆட்சேர்ப்பு தேர்வை ரத்து செய்தது. இந்த விவகாரம் வெளியான உடனேயே மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

ராணுவ தேர்வு வாரியம் மூலம் அதிகாரிகள் மற்றும் பிற அணிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் லஞ்சம் மற்றும் முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் லெப்டினெனட் கர்னல், மேஜர், நாயக் சுபேதர், சிப்பாய் போன்ற 17 ராணுவ அதிகாரிகள், ஆறு தனியார் நபர்கள் மற்றும் பலர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக சிபிஐ தெரிவித்துள்ளது.

அடிப்படை மருத்துவமனை, கன்டோன்மென்ட், பிற ராணுவ நிறுவனங்கள், கபுர்தலா, பதீண்டா, டெல்லி, கைதல், பல்வால், லக்னோ, பரேலி, கோரகபூர், விசாகப்பட்டினம், ஜெய்ப்பூர், குவஹாத்தி, ஜோர்ஹாட் மற்றும் சிரங்கோன் உள்ளிட்ட 30 இடங்களில் தேடுதல் இன்று நடத்தப்பட்டது.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி, பிரிகேடியர் (விஜிலென்ஸ்) வி.கே.புரோஹித் அளித்த புகாரின் பேரில் சிபிஐ இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தற்போது படிப்பு விடுப்பில் உள்ள லெப்டினனட் கர்னல் பகவான், நாயக் சுபேதர் குல்தீப் சிங் ஆகியோரும் எஸ்.எஸ்.பி மையங்களில் சாத்தியமான அதிகாரி வேட்பாளர்களிடமிருந்து லஞ்சம் கேட்பதாக அவர்கள் தெரிவித்தனர். லஞ்சம் கோரி, லஞ்சம் வாங்க வசதி செய்ததாக 23 ராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகளின் உறவினர்கள் உட்பட பொதுமக்கள் மீது சிபிஐ வழக்கு பதிவு செய்துள்ளது.

## ஷாக்கடிக்கும் ஒரு லட்சம் கோடி மின் துறை ஊழல்

- மாயோன் March 10, 2021

ஊழல், ஊதாரித்தனம், கமிஷன், கையூட்டு ஆகியவற்றின் மூலம் தமிழக மின்வாரியத்தை மீள முடியாத ஒன்றரை லட்சம் கோடி கடனில் தள்ளியுள்ளது அதிமுக அரசு தற்போது இதை மத்திய அரசின் தலைமை கணக்கு தணிக்கையாளர் அறிக்கையை ஆதாரமாக காட்டி, தமிழக மின் துறை முறைகேடுகளை அறப்போர் இயக்கம் அம்பலப்படுத்தியுள்ளது.

சிபிஐயிடம் சென்று முறையிட்டால், அவர்கள் சொல்வது மத்திய அரசின் பணம் சம்பந்தப்பட்டிருந்தால் நாங்கள் விசாரிப்போம். இது மாநில அரசு சம்பந்தப்பட்டது மாநில போலீசாரிடம் சென்று முறையிடுங்கள்"

லோக் ஆயுக்தாவிடம் முறையிடலாம் என்றால் அவர்களுக்கு எப்ஐஆர் போடும் அதிகாரமே இல்லாத வகையில் செய்து வைத்துள்ளார்கள்.

இந்த நிலையில் தமிழக மின்சாரத் துறையின் ஒரு லட்சம் கோடி ஊழலை கண்ணுற்ற அறப்போர் இயக்கத்தினர் பத்திரிகையாளர்கள் மூலம் மக்களின் பார்வைக்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்த மெகா ஊழல் குறித்து சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் அறப்போர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ஜெயராம் வெங்கடேசன், ஊழலுக்கு முக்கிய ஆதாரமான மத்திய அரசின் தலைமை கணக்கு தணிக்கையாளரின் அறிக்கையையும் அவர் வெளியிட்டு பேசியதாவது

"தமிழக மின்சார துறை தனியார்களிடம் இருந்து மின்சாரம் கொள்முதல் செய்ய நீண்ட கால ஒப்பந்தங்களை போட்டுள்ளது. இவற்றின் கால அளவு 2013ம் ஆண்டு முதல் 2028 ஆம் ஆண்டு வரை 15 ஆண்டுகாலம் ஆகும்.

கடந்த எட்டு ஆண்டுகளில், இந்த ஒப்பந்தங்களில் பல்வேறு சட்ட மீறல்கள் நடைபெற்றுள்ளன. சந்தை மதிப்பைவிட இரண்டு மடங்கு அதிக விலைகொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தால் இதுவரை ரூ.54 ஆயிரம் கோடி மக்கள் பணத்தை இழந்து விட்டோம். இனியும் விழித்துக்கொண்டு இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யாவிட்டால் மேலும் ரூ.46,000 கோடியை இழந்து விடுவோம் .

இந்த ஊழல் முறைகேட்டுக்கு மின்சார துறை அமைச்சர் தங்கமணி, இதே துறையின் முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் பொறுப்பாளிகள் ஆவர்.

மின்சாரம் கடந்த 5 ஆண்டுகளாக சந்தையில் ஒரு யூனிட்டுக்கு ரூ 2.5 முதல் ரூ 3.5 வரையில் எளிதாக கிடைக்கிறது. ஆனால், நம்முடைய தமிழக அரசு சட்ட விரோத ஒப்பந்தங்கள் மூலம் தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒரு யூனிட் ரூ.4.9 முதல் ரூ.6 வரையில் கொடுத்து கொள்முதல் செய்துள்ளது.

இந்திய அரசின் தலைமை கணக்கு தணிக்கையாளர் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 வரை தனியாரிடமிருந்து தமிழக மின்சாரத்துறை கொள்முதல் செய்ததில் ஏற்பட்ட இழப்பு கிட்டத்தட்ட ரூ.30 ஆயிரத்து 72 கோடி என்று தெரிவித்துள்ளது.

இந்த தணிக்கை அறிக்கை தமிழக அரசால் இதுவரை சட்டசபையில் தாக்கல் செய்யப்படவில்லை. அறப்போர் இயக்கம் இன்று இந்த தணிக்கை அறிக்கையின் நகலை மக்கள் நலன் கருதியும் தமிழக மின்சாரத்துறை நலன் கருதியும் வெளியிட்டுள்ளது. தனியாரிடம் செய்து கொண்டுள்ள இந்த ஒப்பந்தங்களில் விதிகளை மாற்ற வேண்டுமென்றால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதல் பெற வேண்டும் . அந்த ஆணையத்தின் ஒப்புதல் பெறாமலேயே ஒப்பந்த விதிகளை மின்சார வாரியம் மாற்றியுள்ளது.

வடநாட்டிலிருந்து மின்சாரம் கொண்டு வர கிரிட் இணைப்பு இல்லை என்று தெரிந்தும் ஐந்து மாதத்திற்குள்

மின்சாரம் தர தனியாரிடம் 11 ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

கிரிட் (GRID) இணைப்பு இல்லாததால் பெரும்பாலான நிறுவனங்களால் ஐந்து மாதத்திற்குள் மின்சாரம் தர இயலவில்லை கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்கு இதே நிலைதான் நீடித்தது அப்படி இருந்தும் ஒப்பந்தங்களை ரத்து செய்யாமல் கொள்முதல் செய்தார்கள். 2016 -17 முதல் கிரிட் இணைப்பு வழியாக மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டது. அப்போது சந்தை மதிப்பு யூனிட்டுக்கு வெறும் ரூ.2 முதல் ரூ 3 50 வரை தான். எளிதாகவும் மின்சாரம் கிடைத்தது.

ஆனால் தனியார் நிறுவனங்களுக்கு ரூ 5 முதல் 6 வரை கொடுத்து வாங்கினார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் இவ்வாறு வாங்கியதில் மட்டும் ரூ 25 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. சந்தை மதிப்பை விட அதிக தொகை கொடுத்து வாங்க தமிழக மின் வாரியம் முடிவு எடுத்ததற்கு காரணமாக இருந்த அக்ஷய்குமார், ராஜகோபால் ஆகிய அதிகாரிகளையே தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினராகவும் கொண்டு வந்து ஆணையத்திடம் ஒப்புதல் பெற்றார்கள்.

ஆணையத்தின் மற்றொரு உறுப்பினராக இருந்த நேர்மையாளர் நாகல்சாமி இந்த ஒப்பந்தத்தில் உள்ள சட்ட விரோத செயல்களை சுட்டிக்காட்டி ஒப்புதல் தர மறுத்தார். ஆனால், அவருடைய ஆணையை வெளியிடாமல் மறைத்து விட்டார்கள். அந்த ஆணையையும் அறப்போர் இயக்கம் வெளியிட்டுள்ளது.

தமிழக மின்சாரத்துறை ஏற்கனவே 1.5 லட்சம் கோடி கடனில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. தமிழக மின்சார துறையின் கடன் ஆண்டுதோறும் பெருகிவரும் நிலையில், இந்த மெகா ஊழலை தொடர்ந்து அனுமதித்தால் நமது மின்துறை மீண்டுவர முடியாத துறையாகிவிடும்.

நடைபெற்றுள்ள ஊழல் தொடர்பாக துறையின் தற்போதைய அமைச்சர் தங்கமணி, முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் மற்றும் சம்பந்தப்பட்ட பொது ஊழியர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுத்துள்ளோம்". இவ்வாறு அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

அதிமுக அரசு பொறுப்பேற்றது முதல் மின் உற்பத்தி மற்றும் பராமிரிப்பு ஆகியவற்றை தனியாருக்கு தாரைவார்க்கவும், அதன் மூலம் கூடுதல் விலைக்கு மின்சாரத்தை வாங்குவதன் மூலம் கமிசன் பெறவுமாக செயல்பட்டு வருகிறது. தமிழக மின்வாரியத்தில் பல்லாயிரக்கணகான பணியிடங்களை நிரப்பாமல், தேவைப்படும் ஊழியர்களை ஒப்பந்த முறையில் வேலைக்கு அமர்த்தி பத்தாண்டுகளாக பணி நிரந்தரம் செய்யாமல் அலைகழிக்கிறது அதிமுக அரசு.

ஊழியர்களுக்கு பதவி உயர்வுமில்லை, சம்பள உயர்வுமில்லை, பஞ்சப்படி இல்லை, போனஸோ சரி பாதியாக குறைப்பு என பல்லாயிரம் ஊழியர்களை வாட்டி வதைத்து, மின் துறைக்கு நஷ்ட கணக்கு காட்டும் அதிமுக அரசு, மறுபுறம் மின்சாரத்துறையில் ஒரு லட்சம் கோடியை சூறையாடியுள்ளதானது ஷாக்கடிப்பதாக உள்ளது.

தமிழக மின்சார வாரியத்தில் காலியாக உள்ள 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியிடங்களை தனியார் மூலம் ஒப்பந்த ஊழியர்களாக நிரப்புவது தொடர்பான ஒப்பந்தப் புள்ளிகளைத் தேர்வு செய்வதற்கு மின்வாரியம் ஒப்புதல் அளித்து, அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழகம் முழுவதும் மின்வாரிய ஊழியர்கள் கடுமையான உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர். இந்நிலையில், தனியார் மூலம் வேலைக்கு ஆள் நியமிக்கும் உத்தரவை ரத்து செய்வதாக தமிழக மின்சாரத்துறை அமைச்சர் தங்கமணி பின் வாங்கினார் என்பது நினைவுகூறத் தக்கது.

# தேர்தல் நேரத்தில் சிரிச்சிட்டு சிந்திங்க

*ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மந்திரி. இவங்க ரெண்டு பேரும் ஒரு நாள் மாலை நேரம் நடைபயிற்ச்சி போனாங்க. ஒரு ஆத்தங்கரை ஓரமா போயிட்டு இருந்தாங்க.*

*அப்போ அங்கே ஒரு கொடியில வெள்ளரிக்காய் காய்ச்சு தொங்குவதை பார்த்த ராஜா... "மந்திரி அந்த வெள்ளரிக்காய பறிச்சுட்டு வா சாப்பிடலாம்"ன்னு சொன்னார்.*

*மந்திரி பறிக்க போனார். அங்கே உக்கார்ந்து இருந்த ஓரு குருடன் சொன்னான். ஐயா அது வெள்ளரிக்காய் இல்ல. அது குமட்டிகாய். அது தின்னா வாந்தி தான் வரும்.*

*ராஜா சொன்னார். யோவ் மந்திரி. அத பறிச்சு சாப்பிடு. வாந்தி வருதான்னு பாக்கலாம்.*

*வேற வழி இல்லாம மந்திரி சாப்பிட்டார். உடனே மந்திரிக்கு குமட்டிக்கிட்டு ஒரே வாந்தி.*

*ராஜா கேட்டார். யோவ். கபோதி.. இதுக்கு என்ன தீர்வு.?ன்னு.*

*அந்த குருடன் சொன்னான். அது பக்கத்துல ஒரு கை மாதிரி பச்சை இலை இருக்கும். அத கையில கசக்கி மந்திரி வாயில விட்டா வாந்தி நிக்கும் ன்னு.*

*ராஜாவும் அப்படியே பண்ண... மந்திரிக்கு வாந்தி நின்னு போச்சு. மந்திரிக்கு போன உசுரு திரும்பி வந்தது.*

*ராஜா குருடனை பார்த்து கேட்டார். உனக்கு தான் கண் தெரியாதே.? எப்படி சரியா தீர்வு சொன்னாய்.?

குருடன் சொன்னான். ராஜா.. இந்த நாட்ல எங்கேயும் பஞ்சம் பசி பட்டினி. அப்படி இருக்கும் போது வனாவது வெள்ளரி பிஞ்ச விட்டு வச்சிருப்பானா.? எப்பவும் இயற்கை ஒரு நோய் கொடுக்கற காய குடுத்தா இறைவன் பக்கத்துலயே ஒரு மாற்று மருந்து வெச்சிடுவார்.*

*ராஜாவுக்கு சந்தோஷம்.*

*இந்தா ஒரு டோக்கன். என் அரண்மனையில கிழக்கு வாசலுக்கு போ. பட்டை சாதம் குடுப்பாங்க. சாப்பிட்டு ஜாலி யா இரு. சொல்லிவிட்டு ராஜா போய்ட்டார்.*

*கொஞ்ச நாள் கழித்து ஒரு வெளியூர் வியாபாரி ராஜா கிட்ட வந்தான். ராஜா என்கிட்ட வைரம் நிறைய இருக்கிறது. வாங்குறீங்களா ன்னு கேட்டான்.*

*இது ஒரிஜினலா போலியா ன்னு எப்படி தெரிஞ்சுக்கறதுன்னு ராஜாவுக்கு குழப்பம். மந்திரிய கூப்பிட்டார்.*

*ஏற்கனவே ஒரு தடவை வாந்தி எடுத்த அனுபவம் இருந்ததால...*

*வைரத்தை முழுங்கித்தொலைக்க சொன்னா என்ன பண்றதுன்னு பயந்துட்டு தெரியாதுன்னு ட்டார்.*

*ராஜா சொன்னார். மந்திரி. போய் அந்த கபோதிய கூட்டிட்டு வா. அவன்தான் காரண காரியதோட கரெக்டா சொல்லுவான்.*

*மந்திரி போய் அந்த குருடன கூட்டிட்டு வந்தார். ராஜா சொன்னார். டேய் இது ஒரிஜினல் வைரமா? போலி வைரமா? இல்லன்னா ரெண்டும் கலந்து இருக்கா ன்னு பார்த்து சொல்லு.*

*அந்த குருடன் அந்த மொத்த வைரத்தையும் எடுத்து மத்தியான வெயில்ல கொண்டு போய் வெச்சான். கொஞ்ச நேரம் கழித்து அதை கையில எடுத்து பிரிச்சு.... ராஜா இதெல்லாம் வைரம். மற்றது எல்லாம் கண்ணாடி ன்னு பிரிச்சு கொடுத்துட்டான்.*

*வியாபாரியும் எதோ தெரியாம நடந்துடுச்சு ன்னு சொல்லி எல்லா வைரத்தையும் இனாமா கொடுத்துட்டு நழுவிட்டான்.*

*ராஜாவுக்கு ஆச்சர்யம்.*

*எப்படிப்பா கண்டுபிடிச்ச? விவரமா சொல்லு?*

*குருடன்சொன்னான்.* ராஜா. வெயில்ல வைரம் சூடாகாது. ஆனா கண்ணாடி சூடாகும். அதனால சூடானது எல்லாம் கண்ணாடின்னும் சூடு ஆகாதது எல்லாம் வைரம் ன்னும் பிரிச்சேன்.*

*ராஜா சந்தோஷமா பாக்கெட்ல கைய விட்டு ஒரு டோக்கன் எடுத்து குருடன் கிட்ட குடுத்து போடா மேற்கு வாசலுக்கு. டோக்கன் குடுத்து பட்டை சாதம் வாங்கி சாப்பிட்டு சந்தோஷமா இரு ன்னு சொல்லி அனுப்பி வச்சார்.*

*இப்படியே கொஞ்ச நாள் போச்சு. ராஜா தன் மகனுக்கு கல்யாணம் பண்ண வரன் தேட ஆரம்பிச்சார். பக்கத்து ஊால இருந்து எல்லாம் இளவரசி குடுக்க ரெடியா இருந்தாங்க. ராஜாவுக்கு குழப்பம்.*

*யாரை தேர்ந்து எடுப்பதுன்னு. மந்திரிகிட்ட கேட்கிறார். எல்லா பொண்ணுமே நல்லா இருக்குன்னு பயந்து கிட்டே மந்திரி சொல்றார்.*

*ராஜா பார்த்தார்.*

*கூப்புடுங்கடா அந்த கபோதிய.*

*குருடன் வந்தான்.*

*ராஜா குருடன் கிட்ட சொன்னார். என் மகனுக்கு கல்யாணம் பண்ண பொண்ணு பார்க்குறேன். எந்த ராஜாவோட குமாரி சரியா இருக்கும்ன்னு காரண காரியத்தோட தெளிவா சொல்லு.*

*குருடன் சொன்னான்.*

*ராஜா.. அடுத்த நாட்டை விட்டுட்டு அதுக்கு அடுத்த நாட்டு ராஜாவோட பொண்ண பாருங்கன்னான். அந்த ராஜா உங்க சம்பந்தி ஆயிட்டா பக்கத்து நாட்டு ராஜா உங்க ரெண்டு பேருக்கும் நடுல இருப்பான். அப்போ எல்லை பிரச்சினை வராது. பொண்ண குடுத்ததால அந்த இடைப்பட்ட பகுதில பிரச்சினை வராம பார்த்துப்பான்.*

*ராஜாவுக்கு ஒரே குஷி.*

*சபாஷ். இந்தா டோக்கன். அரண்மனையின் வடக்கு வாசலுக்கு போடா. பட்டை சாதம் குடுப்பாங்க. வாங்கி சாப்பிட்டு சந்தோஷமா இரு அப்படின்னார்.*

*குருடனும் போய்ட்டான்.*

*கொஞ்ச நாள் போச்சு. ஒரு நாள் ராஜா அந்த குருடன தன்னோட அந்தரங்க ஆலோசனை அறைக்கு வர சொன்னார்.*

*டேய்.*

*நான் ஒன்னு கேட்பேன். சரியா காரண காரியதோட சொல்லனும். அப்படின்னார். குருடனும் சரின்னான். இந்த ஊர்ல எல்லோரும் என்னைய பிச்சைகாரனுக்கு பிறந்த பய அப்படின்னு சொல்றாங்க. இதுக்கு நீ என்ன சொல்ற.? சரியா சொல்லனும் என்றார்.*

*குருடன் அமைதியா இருந்தான்.*

*பதிலே பேசல.*

*ராஜா திரும்ப கேட்டார்.*

*குருடன் அமைதியா சொன்னான்.*

*ராஜா நீங்க திரும்ப திரும்ப கேட்கறதால சொல்றேன்.*

*நெசமா நீங்க பிச்சை காரனுக்கு பிறந்தவன் தான். அதுல சந்தேகமே வேணாம் அப்படின்னான்.*

*ராஜாவுக்கு தூக்கி வாரிப்போட்டது. ரொம்ப வருத்தம். ஏன்டா என்னய பார்த்தா இப்படி கணிச்சே..?? ன்னு வருத்தமா கேட்டார்.*

*ராஜா...*

*முதல்ல குமட்டி காய பத்தி சொன்னேன். நீங்க சந்தோஷம் ஆயிட்டீங்க. ஆனா குடுத்தது பட்டை சாதத்துக்கு இலவச டோக்கன்.*

*நிஜமான ராஜாவா இருந்தா கையில இருந்த மோதிரத்தை கழட்டி குடுத்து இருப்பார்.*

*அப்புறம் கோடி கணக்குல வைரம் கிடைக்க வழி செஞ்சேன். நிஜமான ராஜாவா இருந்தா கழுத்துல இருந்த வைர மாலைய குடுத்து இருப்பார்.*

*ஆனா நீங்க குடுத்தது பட்டை சாத டோக்கன்.*

*மூன்றாவது... ஒரு ராஜ்ஜியமே உங்க கைகுள்ள வருவதற்கு வழி சொன்னேன். உண்மையான ராஜாவா இருந்தா நாலு கிராமத்த
எழுதி குடுத்து இருப்பார்.*

*நீங்க குடுத்தது வடக்கு வாசல் பட்டை சாத டோக்கன்.*

*ஆக.... சோத்தை தாண்டி உங்க எண்ணம் போகல. உலகத்துலேயே பெரிய விசயம் சோறுன்னு முடிவு பண்ணிட்டீங்க. இதுல இருந்து தெரியல.?*

*நீங்க பிச்சைக்காரனுக்கு பிறந்தவன்னு.? ஏன்னா உங்க புத்தி டோக்கனோடவும் பட்டை சாதத்தோடவும் முடிஞ்சு போச்சு. அதுக்கு மேல போகல என்றான்.*

*மன்னர் வெட்கி தலைகுனிந்தார்.*

*அந்த குருடனிடம் இருந்த மதிநுட்பம் தேவையான நிலைமைல தான் இப்ப நாம இருக்கோம்.*

*தெளிவான முடிவெடுத்துவாக்களிப்போம்*

### தேர்தல் மீதான நம்பகத்தன்மையை இழந்தால்

# உலக நாடுகள் மத்தியில் நம் நாட்டின் மதிப்பு வீழ்ந்துவிடும்

## ஐகோர்ட்டு கருத்து

சென்னை, ஏப்.1- தேர்தல் மீதான நம்பகத் தன்மையை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். இந்த நம்பகத் தன்மையை இழந்தால் உலக நாடுகள் மத்தியில் நம் நாட்டின் மதிப்பு வீழ்ந்துவிடும் என்று சென்னை ஐகோர்ட்டு கருத்து தெரிவித்துள்ளது.

### வாட்ஸ்அப் பிரசாரம்

சென்னை ஐகோர்ட்டில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் தலைவர் ஆனந்த் தாக்கல் செய்துள்ள மனுவில், 'புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை ஒட்டி வாக்காளர்களின் செல்போன் எண்களுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பியும், வாட்ஸ் [illegible] குருப் தொடங்கியும் [illegible] பிரசாரம் செய் [illegible] அதற்கா [illegible] [illegible] [illegible] களை சட்ட விரோதமாக பெற்றுள்ளனர். இந்த வகை பிரசாரத்துக்கு தடை விதிக்க வேண்டும். இது குறித்து [illegible]

ஐகோர்ட்டு தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தபோது தேர்தல் ஆணையத்தின் சார்பில் ஆஜரான வக்கீல், 'பா.ஜ.க. தேர்தல் பிரசார விவகாரம் குறித்து சைபர் கிரைம் போலீஸ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோல் பிரசாரம் செய்ய பா.ஜ.க. எந்த ஒரு அனுமதியையும் தேர்தல் அதிகாரியிடம் பெறவில்லை. இந்த சம்பவம் குறித்து பா.ஜ.க.வுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது' என்று கூறினார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி [illegible] முன் [illegible] மீண்டும் விசாரணைக்கு வந்தது. [illegible] ஆணைய [illegible] ஆஜரான வக்கீல் [illegible] ஆதார் ஆணையத்தில் இருந்து பொதுமக்களின் செல்போன் எண் [illegible]

வாதிட்டார்.

### நம்பகத்தன்மை

பா.ஜ.க. சார்பில் ஆஜரான வக்கீல், 'கட்சியினர் மூலம் சேகரிக்கப்பட்ட செல்போன் எண்களை முகவர்களுக்கு அளித்து அதன் மூலம் பிரசாரம் செய்யப்பட்டது' என்று விளக்கம் அளித்தார். இந்த வழக்கில் பா.ஜ.க. சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனு தற்போதுதான் கிடைத்தது என்று மனுதாரர் தரப்பு வக்கீல் கூறினார். அதையடுத்து இந்த வழக்கு இன்று (வியாழக்கிழமை) மீண்டும் விசாரிக்கப்படும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மேலும், 'தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெறாமல் வாக்காளர்களுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பியது எப்படி?' என புதுச்சே[illegible] பா.ஜ.க.வின[illegible] கேள்வி [illegible] நீதிபதிகள், 'நாட்டின் அடிப்படை [illegible] வாக்[illegible] நேர்மை[illegible] செலுத்துவதை உறுதி செய்ய வேண்டும். பல பிரச்சினைகள் இருந்[illegible]

தினத்தந்தி

இலஞ்சம் தவிர்! Date of Publication : 5th of Every Month நெஞ்சம் நிமிர்!

நேர்மைநெறி - ஏப்ரல் 2021

Registered with the Registrar of Newspapers for India, New Delhi Regn.No.**TNBIL/2003/10419**

SSP/Chennai City North Divn. Regn.No.**TN/CCN/671/2018-20**

**PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)/WPP 533/2018-2020**

## சட்டம்

**சத்தியவானை நோகடிக்கும்**
**சாமனியனை சாகடிக்கும்**
**சிங்கத்தின் முன் சிறு முயலாய்**
**சக்கரவர்த்திகளிடம் சரணடைந்தாய்**
**ஓட்டைத் தேடும் வேட்டைக்காரனுக்கு**
**பூட்டையே திறந்து காட்டும்**
**நடிகையர் நகக்கீறலுக்கே துடிதுடிக்கும்**
**நெஞ்சு உரம் போட்டு**
**வியர்வை நீர் பற்றாமல்**
**மழை நோக்கி வானம் பார்த்து**
**களை நீக்கிப் பாடு பார்த்து**
**விளைய வைப்பான் விவசாயி- அதற்கு**
**விலை சொல்வான் வியாபாரி.**

**களவாடிய பொருளுக்கே விலை சொல்லும் உலகில்**
**என் உழவன் களவாடிய ”பொருளுக்கு’.?**
**மூன்று வேளை உணவளிக்க ஏரோட்டி**
**இரண்டு காணி நிலம் காக்க போராடினால் அதை**
**ஒரு வரி செய்தியாய் நம் தலைவிதி.**

**என்று தனியும் - இந்த சுதந்திர தாகம்**

# நேர்மை நெறி

**ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்**

ஆசிரியர் : வே.கார்த்திகை ராஜன்

Permitted dates of posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) Chennai. On 12th April 2021

If Undelivered Please Return to:
**ACM, 155, KONNUR HIGH ROAD,**
**AYANAVARAM, CHENNAI-23**

Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI and published on its behalf by GOVINDASAMY (9841026766) from : No.155, "Nambagam" Konnur High Road, Ayanavaram, Chennai - 600 023 and printed by Thiru.S.G.PARTHASARATHY, at VPS PRINTERS, No.292, T.H.Road, Chennai-600005. Editor : V.Karthikai Rajan